# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் ஜெர்மனியில் நடைபெற்ற குத்தாமுல் அஹ்மதிய்யா இஜ்திமா திடலில் 16.09.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இறையருளால் இன்று ஜெர்மனியின் குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் லஜ்னா இமாயில்லாஹ்வுடைய இஜ்திமா தொடங்குகின்றது. மேலும் இங்கிலாந்திலும் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் இஜ்திமா தொடங்குகின்றது. இதேபோன்று மேலும் பல நாடுகளில் இன்று ஜல்ஸாக்கள் மற்றும் இஜ்திமாக்கள் நடைபெறுகின்றன. அல்லாஹ் இந்த அனைத்து இஜ்திமாக்களையும் தனது அருளால் வெற்றி பெறச் செய்வானாக! கலந்து கொள்ளக்கூடிய ஒவ்வொருவரும் அளவற்ற பலன்களைப் பெறக்கூடியவராக ஆகட்டுமாக! இந்த இஜ்திமாவின் நோக்கத்தை நிறைவேற்றக் கூடியவராகட்டுமாக! அல்லாஹ் கலந்து கொள்ளக்கூடிய அனைவரையும் அனைத்து வகையிலும் தனது பாதுகாப்பில் வைப்பானாக! பொறாமைக்காரர்கள் மற்றும் எதிரிகளின் தீங்கிலிருந்தும் நம்மை பாதுகாப்பானாக! அல்லாஹ்வின் அருளால் நாம் ஒவ்வொரு நாளும் ஜமாஅத்தின் முன்னேற்றத்தைக் காண்கின்றோம். எந்த அளவு இந்த முன்னேற்றத்தில் வேகம் அதிகரிக்கின்றதோ அந்த அளவு உலகின் ஒவ்வொரு நாட்டிலும் பொறாமைக்காரர்கள் மற்றும் தீங்கிழைக்கக்கூடியவர்கள் உருவாகிக் கொண்டே செல்கின்றார்கள். இதுபோன்ற பொறாமைக்காரர்கள் மற்றும் தீங்கிழைக்கக்கூடியவர்கள் உருவாகுவது உலகில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் முன்னேற்றப் பாதையில் செல்கிறது என்பதற்கான ஆதாரமும், அத்தாட்சியும் ஆகும். எனவே இந்த எதிரிகள் மற்றும் எதிரிகளின் திட்டங்கள் அனைத்தும் ஜமாஅத் பரவுவதற்கும் முன்னேற்றம் அடைவதற்குமான அளவுகோலாகும். இதிலிருந்து எந்தவொரு மூஃமினும் பதற்றம் அடையக் கூடாது. ஒரு மூஃமினுக்கு கவலை அடையக்கூடிய விஷயம் இருக்கின்றது என்றால் அது ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் தூய்மையான தொடர்பில் குறைவு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே இருக்க வேண்டும். அவர் செல்லக்கூடிய தக்வாவின் தரம் குறைந்து விடக் கூடாது என்பதற்காக இருக்க வேண்டும்.

மாறாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எந்த அளவு கூறியிருக்கின்றார்கள் என்றால் நன்மை மற்றும் தக்வாவின் ஓரிடத்தை அடைந்த பின்னர் அதில் நின்றுவிட்டீர்கள் என்றால் இதுவும் உங்களுக்கு ஒரு அபாயகரமான விஷயமாகும். இது சிந்திக்கக்கூடிய இடமாகும். ஏனென்றால் இதற்குப் பிறகு கீழே இறங்குவது தொடங்கி விடும்.

எனவே நமது ஆண்களுக்கும், பெண்களுக்கும், குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும், இளைஞர்களுக்கும், முதியவர்களுக்கும் தனது தக்வாவில் முன்னேறுவதை தடுக்கக்கூடிய அந்த எதிரியைப் பற்றி கவலைப்பட வேண்டும். அது அவர்களை நன்மையில் முன்னேறுவதிலிருந்து தடுக்கின்றது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

நான் ஜமாஅத்திற்கு மீண்டும் கவனமூட்டுகின்றேன். நீங்கள் அவர்களின் எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாதீர்கள். தக்வா மற்றும் தூய்மையில் முன்னேறுங்கள். அப்போதுதான் அல்லாஹ் உங்களுடன் இருப்பான். மேலும் அவர்களிடமிருந்து அவன் தானே அறிந்து கொள்வான்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

நிச்சயமாக அல்லாஹ் தக்வாவை மேற்கொள்பவர்களுடனும், நன்மை செய்யக்கூடியவர்களுடனும் இருக்கின்றான். (16:129)

எனவே நன்மைகள் மற்றும் தக்வாவில் நமது பாதங்கள் முன்னேறிச் செல்கின்றன என்றால் எதிரிகளால் நம்மை ஒன்றும் செய்து விட முடியாது. கடந்த 125 வருடங்களாக நாம் இதனைத்தான் பார்க்கின்றோம். ஒவ்வொருவரும் இதனைக் காண்கின்றனர்.

எதிரிகள் நமது சில அன்பிற்குரியவர்களின் வாழ்க்கையை முடித்து விட்டார்கள். மேலும் நமது பொருட்களை அபகரித்தார்கள். இதற்குப் பதிலாக இந்த உலகத்திலிருந்து சென்ற உயிர்களுக்கு இறைவிருப்பம் கிடைக்கப் பெற்று நிரந்தரமான வாழ்வு கிடைத்து விட்டது. மேலும் நிரந்தர வாழ்வைப் பெறக்கூடிய மக்களுடன் இந்த உயிர்கள் இணைந்து விட்டன. தனிப்பட்ட முறையிலும் பொருளாதாரக் குறைபாட்டையும் அல்லாஹ் நிறைவேற்றி வைத்து விட்டான். இங்கு உட்கார்ந்து இருக்கக்கூடிய பலரும் இதற்கு சாட்சியாவார்கள்.

மேலும் ஜமாஅத் அளவிலும் இந்த தியாகங்களுக்குப் பதிலாக அல்லாஹ் வழங்கிய அருட்கொடைகளுக்கு அளவே இல்லை. எனவே நமக்கு கவலை ஏற்பட வேண்டும் என்றால் எதிரிகளின் திட்டங்களைக் கண்டு அல்ல. மாறாக அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறக்கூடிய தனது தக்வாவைப் பற்றித்தான் கவலைப்பட வேண்டியது உள்ளது. இது நமது கையிலிருந்து விலகிச் சென்று விடக் கூடாது. இதில் எந்த விதமான குறைவும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதைப் பற்றித்தான் கவலை இருக்க வேண்டும்.

நாம் அல்லாஹ்வுடன் உறுதியான தொடர்பு கொண்டிருந்தோம் என்றால், நமது துஆக்கள் அல்லாஹ்வுடைய அருள்களை ஈர்க்கும். எதிரிகளைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று இறைவன் தானாகவே அறிந்து கொள்வான். மேலும் அல்லாஹ் அறிந்து கொண்டு தான் இருக்கின்றான். இந்த அளவு எதிரிகளின் கூச்சல் குழப்பத்திற்குப் பிறகும் கூட இந்த எதிர்ப்பு வெறும் நாட்டிற்குள் மட்டும் கிடையாது. மாறாக பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி சேனல்கள் மூலம் உலகில் அனைத்து இடங்களிலும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் எதிர்ப்புக்கு உள்ளாகிறது. ஆனால் இதுபோன்ற எதிர்ப்புகள் ஜமாஅத் அறிமுகமாவதற்கு காரணமாக அமைகின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறி வந்தார்கள். நமது தூதுச் செய்தி எவ்வாறு சென்றடைகிறது என்பதைப் பற்றி நமக்குக் கூட தெரியாது. ஒரு கூட்டத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். அதிக அளவில் மக்கள் இந்த ஜமாஅத்தில் இணைகின்றார்கள். வெளிப்படையில் இதற்குரிய காரணிகளைப் பற்றி நமக்குத் தெரியாது. நமது சார்பாக சமுதாயங்களில் அறிவுரையாளர்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் சென்று மக்களை இதன் பக்கம் அழைக்கின்றனர். இறைவனால் மட்டும் ஏற்படுத்தப்பட்ட ஒரு ஈர்ப்பு இதனுடன் இணைந்துள்ளது. இதனால் மக்கள் ஈர்க்கப்பட்டு வருகின்றார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: அதில் ஒரு ஈர்ப்பு உள்ளது. அல்லாஹ் எதுவரை இந்த ஜமாஅத்தை கொண்டு செல்ல நாடியுள்ளானோ அதுவரை இந்த ஈர்ப்பு அதில் இருக்கும். எனவே, ஒரு சில மக்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாதம் மற்றும் அன்னாருடைய நூல்களைப் படித்து கவனம் ஏற்பட்டது. இன்னும் சிலருக்கு அன்னாரின் தூதுச் செய்தியினைக் கேட்ட அறிவுரையாளர்கள் மற்றும் முபல்லிக்குகள் விஷயங்களைக் கேட்டு கவனம் ஏற்பட்டது.

வேறு சிலருக்கு அல்லாஹ் அவர்களுடைய ஆர்வத்தை அறிந்தவாறு நேர்வழியினைக் காட்டியுள்ளான். நேர்வழியினைக் காட்டுகின்றான். நேர்வழியினைக் காட்டிக் கொண்டே செல்கின்றான்.

இப்படிப்பட்ட மக்கள் ஏதாவது முயற்சியின் மூலமாக அல்லாமல் எங்கிருந்தாவது தூதுச் செய்தியினைக் கேட்டு அல்லது அல்லாஹ் நேர்வழி காட்டப்பட்ட மக்களைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். அல்லாஹ் இவர்களுடைய நேர்வழிக்கான வழிகளை ஏற்படுத்துகின்றான். ஒரு காந்த ஈர்ப்புச் சக்தியைப் போல அவர்கள் ஜமாஅத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டு வருகின்றார்கள்.

அந்தக் காலத்திலும் அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உயிரோடு இருக்கும் காலத்திலும் மக்கள் ஈர்க்கப்பட்டு வந்தார்கள். மேலும் இன்னும் ஈர்க்கப்பட்டு வருகின்றார்கள். உலகில் அன்னாருடைய தூதுச் செய்தி ஏதாவது ஒரு வகையில் எட்ட வைக்கப்படுகிறது. அல்லது ஏதாவது நல்லியல்பு கொண்ட மக்கள் நேர்வழிக்காக துஆ செய்யும் போது ஈர்க்கப்பட்டு வருகின்றார்கள். இதுவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு ஒரு சான்றாகும். அல்லாஹ் இந்த ஈர்ப்புச் சக்தியை இன்னும் வைத்துள்ளான். அல்லாஹ் இன்றும் இதற்கான வழிவகையினை ஏற்படுத்தி வைத்திருக்கின்றான். இதன் மூலம் மக்களுடைய கவனம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பக்கம் ஏற்படுகின்றது. எதிர்ப்பு இருந்தபோதிலும் அல்லாஹ்வின் அருள் அதிகமாகிக் கொண்டே செல்கின்றது.

ஒரு கூட்டத்தில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எதிரிகளின் எதிர்ப்பு மற்றும் அல்லாஹ்வின் விருப்பம் என்ன என்பதைப் பற்றி கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள். இன்று இரவு இல்ஹாம் இறங்கியது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தானே இந்த இல்ஹாமிற்கு விளக்கம் அளிக்கின்றார்கள். இறுதியில் ஃபிர்அவன் அதாவது ஃபிர்அவ்னுடைய பண்பைக் கொண்டவர்கள் மற்றும் ஹாமான் அதாவது ஹாமானுடைய பண்பைக் கொண்டவர்கள் அவர்களுடன் உள்ள மக்கள் படைகள் அனைவரும் தவறான பாதையில் இருக்கிறார்கள் என்பதை இறைவன் வெளிப்படுத்துவான்.

இதற்கு விளக்கம் அளித்தவாறு அன்னார் அந்தக் கூட்டத்தில் கூறுகின்றார்கள். இந்த இல்ஹாம் எனக்கு இரவில் இறங்கியது. ஃபிர்அவன் மற்றும் அவனது கூட்டத்தார்கள், பனீ இஸ்ராயீல் அழிந்து போகக்கூடிய சமுதாயமாகும்; அதனை நாம் விரைவில் அழித்து விடுவோம் என்று நினைத்தார்கள். இறைவன் கூறினான். இவ்வாறு சிந்திப்பதில் அவர்கள் தவறிழைத்தவர்கள் ஆவார்கள். இதைப் போன்று இந்த ஜமாஅத்தைப் பற்றி எதிரிகளும், பகைவர்களும் இந்த ஜமாஅத் அழிந்து போய் விடும் என கூறுகின்றனர். ஆனால் இறை நாட்டம் வேறொன்றாக உள்ளது.

எனவே உலமாக்கள் மற்றும் அரசராக இருந்தாலும் சரி அல்லது மற்ற அமைப்புகளாக இருந்தாலும் சரி இறை ஜமாஅத்தை அழிக்க முடியாது. பெரிய பெரிய ஃபிர்அவ்ன்கள் வந்தார்கள். ஹாமான்கள் வந்தார்கள். ஆனால் இவ்வுலகில் தோல்வியடைந்து மரணித்தார்கள். பெரிய பெரிய பொறாமைக்காரர்கள் வந்தார்கள். அவர்கள் தனது பொறாமையில் தானே விழுந்து அழிந்து போனார்கள்; அழிந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். பெரிய பெரிய தீயவர்கள் எழுந்தார்கள். ஆனால் தானே அந்த தீமைக்கு ஆளாகினர். அல்லாஹ்வுடைய அருளைப் பற்றி கூறப்படுகின்றது. எவ்வாறு அல்லாஹ் மக்களுடைய கவனத்தைத் திருப்புகின்றான் என்பதே தெரியவில்லை என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

நான் கூறியது போன்று இன்றும் கூட இப்படிப்பட்ட உதாரணங்களை நம்மால் காண முடிகின்றது. அதிக அளவு தென்படுகின்றன. இன்றைய தினங்களில் நடைபெறுகின்ற ஒரு சில சம்பவங்களை நான் உதாரணமாக எடுத்துள்ளேன். அதனை உங்கள் முன்பு எடுத்துரைக்கின்றேன்.

**பாலஸ்தீனைச் சார்ந்த ஹிபல் அஹ்மத் சாஹிப் கூறுகின்றார்:**

சிறு வயதில் ஒரு கனவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், நீர் இமாம் மஹ்தியுடைய படை வீரர் ஆவீர் என எனக்கு நற்செய்தி வழங்கினார்கள். அப்போதிருந்தே நான் இமாம் மஹ்தியைத் தேட ஆரம்பித்தேன். ஒருநாள் நான் கிறிஸ்தவ சேனல் ஒன்றை பார்த்துக் கொண்டிருந்தேன். அதில் கிறிஸ்தவர்கள் இஸ்லாம் மற்றும் நபி (ஸல்) அவர்களைப் பற்றி தவறாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். உடனே நான் இதற்குப் பதில் அளிக்கக்கூடிய ஏதாவது அரபிச் சேனல் இருக்கிறதா என தேட ஆரம்பித்தேன். ஆனால் அதில் இதற்கு பதில் அளிக்கக்கூடிய விஷயங்கள் இல்லாமல், மந்திரம், தலாக், வியாபாரம் போன்ற விஷயங்கள் பற்றி பேசப்பட்டுக் கொண்டிருந்தன. சில நாள்களுக்குப் பிறகு அதிர்ஷ்வசமாக M.T.A கிடைத்தது. எனக்கு இவர்கள் உண்மையாளர்கள் என உணர முடிந்தது. பிறகு தொடர்ந்து அதனைப் பார்க்க ஆரம்பித்தேன். இந்த சேனல்

என்னை சிந்திக்கச் செய்து விட்டது. இப்போது உள்ளம் தெளிவு பெற்று விட்டது. இதற்குப் பிறகு நான் பைஅத் செய்ய விரும்புகின்றேன். எனது பைஅத்தை தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள்.

**பிறகு அரபு நாட்டைச் சேர்ந்த நமது சகோதரர் அஹ்மது இப்ராஹீம் சாஹிப் எழுதுகின்றார்:**

திடீரென்று M.T.A பார்ப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. ஆரம்பத்தில் கொஞ்சம் ஆட்சேபனைகள் இருந்தன. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக உள்ளம் தெளிவு பெற்றது. இஸ்திகாரா செய்த பிறகு இன்னல்லஸீன யுபாயீவூனக்க இன்னமா யுபாயீவூனல்லாஹ் - உம்மிடம் உடன்படிக்கை செய்து கொள்பவர்கள் அல்லாஹ்விடமே உடன்படிக்கை செய்கின்றனர் (48:11) என பதில் கிடைத்தது. வீட்டார்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றார்கள். அவர்கள் மவ்லவிமார்கள் பின்னால் செல்லக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். இதனால் பலவிதமான கஷ்டங்களும் உள்ளன. அவர் எழுதுகின்றார்: என்னுடைய உறுதியான நிலைநிற்றலுக்காகவும் குடும்பத்தாருக்கு நேர்வழி கிடைப்பதற்காகவும் துஆ செய்யுமாறு வேண்டுகின்றேன் என்று எழுதியுள்ளார். அல்லாஹ் அவருடைய நல்ல எண்ணங்களை ஏற்றுக் கொள்வானாக.

**பிறகு எகிப்தைச் சர்ந்த முஹம்மது அப்துல் சாஹிப் எழுதுகின்றார்:**

இரண்டு வருடங்களுக்கு முன்பு டி.வி. சேனல்களை மாற்றி கொண்டிருக்கும் போது M.T.A. பார்ப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. நிகழ்ச்சிகளைக் கண்டு நான் மிகவும் ஆச்சர்யப்பட்டேன். மறுபுறம் மற்ற மவ்லவிமார்களின் நிகழ்ச்சிகளையும் பார்த்து வந்தேன். அதற்குப் பிறகு இவ்வளவு காலம் என்னிடம் உண்மை மறைந்தே இருந்திருக்கிறது என முடிவுக்கு வந்தேன். உண்மையான மற்றும் தூய்மையான இஸ்லாம் நீங்கள் கூறக்கூடிய இஸ்லாம் தான். மற்ற அனைத்தும் குறைபாடுள்ளதாகவே உள்ளன. இதன் மூலம் அல்லாஹ் எனக்கு நேர்வழியினை வழங்கினான். நான் ஒரு சாதாரண முஸ்லிம் ஆவேன். நான் அஹ்மதி ஆனதால் குடும்பத்தினர் அனைவரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். எந்தவொரு விஷயத்தையும் கேட்பதற்கு அவர்கள் தயாராக இல்லை. மேலும் மவ்லவிமார்கள் இவர்களை மூளைச்சலவை செய்து வைத்துள்ளனர். இவர்கள் அனைவருடைய ஹிதாயத்திற்காக துஆ செய்ய வேண்டுகின்றேன் என எழுதியுள்ளார். அல்லாஹ் இவருடைய நல்ல விருப்பங்களை நிறைவேற்றுவானாக!

**பிறகு எகிப்து நாட்டைச் சேர்ந்த ஹஸ்ரி சாஹிப் எழுதுகிறார்:**

பைஅத் செய்த பிறகு புதிதாக பிறந்தது போல் தோன்றுகிறது என்றும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய காலகட்டத்தில் வாழ்வது போன்றும் தோன்றுகிறது. இதற்கு முன்பு பல விஷயங்கள் உதாரணமாக ஈஸா நபி மரணம் போன்றவை ஒன்றுமே புரியாமல் இருந்தது. ஆனால் ஜமாஅத்தின் மூலம் அதற்கான தீர்வு கிடைத்தது. மவ்லவிமார்கள் எங்களை அதிக அளவு எதிர்க்கவும், ஜமாஅத்திலிருந்து முர்தத் ஆக்குவதற்காக முயற்சியும் செய்கின்றார்கள். இந்த சமயத்தில் நான் இஸ்திகாரா செய்தேன். அப்போது இவ்வாறு பதில் கிடைத்தது. அதாவது இந்த மக்கள் இமாம் மஹ்தியை பொய்ப்படுத்தக் கூடியவர்கள் ஆவர். M.T.A பார்த்து மக்களிடம் பேசுவேன். அவர்களுடைய கேள்விகளுக்குப் பதில் கொடுப்பேன். இவர் என்னைப் பற்றி எழுதுகிறார். இவர் M.T.A பார்ப்பார் என்றும் மக்களை சந்தித்து தப்லீக் செய்வார் என்றும் கூறுகிறார். தொடர்ந்து கூறுகிறார். பழைய அரசு செயல்படும் போது கைது செய்யப்பட்டு, இறைவழியில் கைதாகக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. மவ்லவிமார்கள் எனக்கு எதிராக பொய்யான புகார்களைக் கூறினார்கள். அரசு ஊழியர்கள் சார்பாக எனக்கு பலவிதமான கஷ்டங்கள் கொடுக்கப்பட்டது. இவ்வாறு வழக்கு நடந்து கொண்டிருக்கும் போது நான் அவர்களுக்கு தப்லீக் செய்தேன். ஒருபக்கம் இவர் தப்லீக் செய்து கொண்டிருந்தார். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட ஒரு அதிகாரி கூறினார். நான் உங்களுடைய ஆதாரங்களைக் கேட்டு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார் என நம்புகின்றேன் என்றார். அவர் ஜிஹாதைப் பற்றி கேள்வி கேட்டார். நாங்கள் தற்காப்பு ஜிஹாதை மட்டும் தான் ஏற்றுக் கொள்கின்றோம் என்று நான் கூறினேன்.

பாருங்கள். இவர்களுடைய நோக்கம் இவரை அஹ்மதிய்யத்திலிருந்து தடுப்பது தான். ஆனால் கடைசியில் அவரே ஏற்றுக் கொண்டுள்ளார். தான் சிக்கியிருந்த எல்லையிலிருந்து மீள மட்டும் இல்லை. மாறாக வேட்டைக்காரன் வேட்டையாடுதலின் வலையில் விழுந்து விட்டார். இதுதான் மக்கள் மீது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய அழகிய போதனையின் தாக்கம் ஆகும்.

கூறுகின்றார்: அவர் ஜமாஅத்தைப் பற்றியும் எகிப்தில் அஹ்மதிகளின் நிலை பற்றியும் பல்வேறு கேள்விகளைக் கேட்டறிந்தார். மேலும் நீங்கள் ஏன் தப்லீக் செய்கின்றீர்கள் என்றும் கேட்டார். நான் கூறினேன். நான் எவருக்கும் தப்லீக் செய்வதில்லை. ஆனால் எவராவது என்னிடம் கேட்டால் கண்டிப்பாக நான் கூறுவேன். ஏனென்றால் ஓர் அஹ்மதி பொய் சொல்லமாட்டார். இந்த ஒரு சிறப்பம்சம் ஓர் அஹ்மதியின் அடையாளமாகும். உலகில் அனைத்து இடங்களிலும் பொய் பேசப்படுகின்றது. கடந்த குத்பாவிலும் நான் பொய்யைப் பற்றி மிகவும் விளக்கமாகக் கூறியிருந்தேன். எனவே இதனை ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும். இந்த மிகப்பெரிய சிறப்பம்சத்தை எந்தவொரு அஹ்மதியும் ஒருபோதும் விடவும் கூடாது. மறக்கவும் கூடாது. புதிதாக வரக்கூடியவர்கள் இதுபோன்ற உயர் தரத்தை ஏற்படுத்துகின்றனர். மேலும் இதன்படி முழுமையாக நடப்பதற்கு முயற்சியும் செய்கின்றார்கள். நாம் பொய் சொல்லக் கூடாது என்பதனை முழுமையாக கடைபிடிக்கின்றார்கள். ஏனென்றால் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு நமது உள்ளத்தில் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது நமது ஒவ்வொரு சொல்லும் செயலும் உண்மையாக இருக்கும் போதுதான் நடைபெறும். எனவே இது ஒரு அஹ்மதியின் மேன்மையாகும். இதனை நிலைநாட்டுவது ஒவ்வொரு அஹ்மதியுடைய கடமை ஆகும். அஹ்மதிகள் பொய் சொல்ல மாட்டார்கள் என்பதை நிலைநாட்ட வேண்டும்.

காவல்துறை அதிகாரிகள் கூறினார்கள்: நீங்கள் தப்லீகை தொடர்ந்து செய்தீர்கள் என்றால் குண்டு வெடிப்பிற்கான குற்றத்தைச் சுமத்தி உனக்கு தண்டனையைப் பெற்றுத் தருவோம் என்றனர். இந்த அளவு எதிர்ப்புகள் ஏற்படுகின்றன. ஆனால் அவர் கூறினார். பரவாயில்லை. மேலும் எனது மனைவியிடம் கூட இந்த மவ்லவிமார்கள் உன்னுடைய கணவர் உன்னை ஏமாற்றி இந்த ஜமாஅத்தில் உன்னை இணைத்துள்ளவர் எனவும் கூறியுள்ளார்கள். ஆனால் அவருடைய மனைவியும் ஈமானில் உறுதியுடன் நிலைநின்றிருந்தார். அவர் தனது ஈமானின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியவாறு கூறினார். நான் அவருக்கு முன்பே அஹ்மதியானேன். எனவே நமது ஈமானில் இதுபோன்ற தைரியத்தையும் மகத்துவத்தையும் தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் உண்மைத்துவம் ஏற்படுத்தியிருக்கிறது.

**பிறகு அல்ஜீரியாவைச் சேர்ந்த ஒரு நண்பர் ஒசாமா சாஹிப் எழுதுகின்றார்:**

இரண்டு வருடங்களுக்கு முன்பு வரை ஜமாஅத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாதவனாவாய் இருந்தேன். ஒருநாள் எனது மகன் M.T.A வைப் பற்றி கூறினான். நான் கிண்டல் செய்தவாறு அதனை மறுத்து விட்டேன். பிறகு ஒரு சமயத்தில் குடும்ப பிரச்சனையைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது நான் நபிமார்களுடைய வாழ்க்கை மற்றும் மார்க்க விஷயங்களைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தேன். பிறகு உங்களுடைய சேனலை பார்த்தேன். அதில் அனைத்தையும் உண்மையாகக் கண்டேன். உங்களுடைய போதனைகள் மற்றும் விளக்கங்களால் உள்ளம் திருப்தி அடைந்தது. தப்ஸீரே கபீரைப் படிக்க ஆரம்பித்தேன். பிறகு தப்லீக் செய்ய ஆரம்பித்தேன். ஆனால் எதிர்ப்புகளையும் சந்திக்க வேண்டியதிருந்தது. அப்போது கடந்த நபிமார்களுடைய வாழ்க்கையினை பார்வையிட்டேன். இதுபோன்ற எதிர்ப்புகள் இங்கேயும் தென்பட்டன. எவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு எதிர்ப்புகள் ஏற்பட்டதோ அதே போன்று நடைபெற்றுள்ளது. எழுதுகின்றனர்: தயவுசெய்து என்னுடைய பைஅத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். நான் எல்லா வகையிலும் ஹுஸுருடைய கட்டளையின்படி அமல் செய்வேன். இவர்கள் நல்லொழுக்கத்தில் முன்னேறக்கூடிய மக்கள் ஆவார்கள்.

**அல்ஜீரியாவைச் சேர்ந்த தய்யிப் சாஹிப் தனது சம்பவத்தைக் குறித்து எழுதுகின்றார்:**

ஒருவேளை கிறிஸ்தவர்களுடைய அந்தக் குறிப்பிட்ட சேனல் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் எனக்கு பைஅத் செய்வதற்கான வாய்ப்பே கிடைத்திருக்காது. விளக்கமாக தொடர்ந்து எழுதுகிறார். ஏனென்றால் இந்த சேனலைத்தான் நான் பல நாட்களாக பார்த்துக் கொண்டு வருகின்றேன். இவர்களிடமிருந்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய கண்ணியத்திற்கு மாற்றமான தீய வார்த்தையைக் கேட்டு மேலும் இதற்கு பதில் கூற முடியாமல் முஸ்லிம்கள் தடுமாறிப் போய் கிடப்பதைக் கண்டு உள்ளத்தினுள் குமுறிக் கொண்டிருந்தேன். திடீரென்று ஒருநாள் Hotbird Receiver –ல் சேனலை மாற்றிக் கொண்டிருந்தேன். எனக்கு M.T.A அல் அரேபியா கிடைத்தது. இவர் தற்போது ஸ்பெயினில் வாழ்ந்து வருகின்றார். பொதுவாக நான் Hortbird சேனலைப் பார்க்க மாட்டேன். இருந்தபோதிலும் M.T.A –ல் நபிமார்களை மறுப்பது மற்றும் பைபிளில் இடைச்செறுகல் பற்றிய விவாதம் நடைபெற்றது. இதனைக்கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். எனக்கு தேவையானது கிடைத்து விட்டது என நான் நினைத்துக் கொண்டேன். தொலைந்து போனது கிடைத்து விட்டது. சில நாட்கள் பார்த்த பிறகு எனக்கு திருப்தி ஏற்பட்டது. நான் தற்போது பைஅத்திற்கான கடிதத்தை அனுப்புகின்றேன். நான் இப்பொழுதே இந்த மவ்லவிமார்களின் ஹூத் ஹூத், ரம்லா மற்றும் ஜின்களைப் பற்றி கேலிக்கூத்தான பயான்களைக் கேட்கும் போது சிரிப்பு தான் வருகின்றது. ஆனால் முதலில் இதுபோன்ற பயான்களைக் கேட்டு அவர்களைப் புகழ்ந்து வந்தோம்.

**பிறகு மொராக்கோவைச் சேர்ந்த மற்றொரு நண்பர் அப்துல்லாஹ் சாஹிப் எழுதுகின்றார்:**

நான் சில மாதங்களாக உங்களுடைய நிகழ்ச்சிகளைப் பார்க்கின்றேன். எனக்கு உங்களுடைய குர்ஆன் மஜீதின் கட்டுரைகளைப் பற்றிய அறிவு மற்றும் போதனைகளை ஏற்று நடப்பதனைப் பற்றிய கருத்துகள் மிகவும் பிடித்திருக்கின்றது. மேலும் அவர்களின் தப்ஸீர் மூலமாக கிடைக்கப்பெற்ற விஷயங்களில் பலவிதமான குறைபாடுகள் உள்ளன. மக்கள் மனதில் பதிந்துள்ள தவறான தப்ஸீர்கள், தர்க்கங்கள் பலவிதமான அறிவுக்கு மாறுபட்ட பல விஷயங்கள் அதில் அடங்கியுள்ளன. ஜின்களைப் பற்றிய எண்ணங்கள் மனிதர்களைப் பற்றிப் பிடித்துக் கொள்ளும். அவைகள் மரணிக்காத தனிப்பட்ட ஒரு படைப்புகள் என்பது போன்றவைகள் ஆகும். இதனை நான் ஆரம்பத்திலேயே மறுத்துள்ளேன். சில நேரங்களில் சரியான தஃலீம் கிடைக்கப்பெறாத அஹ்மதிகளில் சிலர், குறிப்பாக பெண்களில் இதுபோன்ற நம்பிக்கை உள்ளது. இவர்கள் அறிவீனர்கள் ஆவார்கள். நான் இங்கும் சிலர் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர்களும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அறிவுள்ள ஒவ்வொரு மனிதரும் இதனை மறுப்பார்கள். இவ்வாறு ஒன்றும் கிடையாது என்று கூறுவார்கள்.

கூறுகின்றார்: ஒருநாள் எனது அதிகாரியிடம் ஆதம் முதல் மனிதன் இல்லை என்பதைப் பற்றி பேசினேன். மலக்குமார்கள் இந்த மனிதன் குழப்பத்தை ஏற்படுத்துவான்; இரத்தம் சிந்துவான் என்று கூறினார்கள். முதலிலேயே மனிதன் இல்லையென்றால் பிறகு மலக்குமார்களுக்கு மனிதனின் உடலில் இரத்தம் இருக்கும் என்பது எவ்வாறு தெரியும்? அதற்கு அந்த அதிகாரி கூறினார். இது மிகவும் பயங்கரமான ஒரு சிந்தனையாகும். இதனை எவரிடமும் கூறாதீர்கள் என்று கூறினார். அவர் எழுதுகிறார்: எனக்கு ஒரு நாள் உங்களது சேனலைப் பற்றி தெரிய வந்தது.

திருக்குர்ஆன் உயிருள்ள ஒளிமிக்க வேதம் என்பதனைப் பற்றிய உங்களது பயானைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். கருணை மற்றும் அருளாளனான இறைவன் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அனுப்பியிருக்கிறான். அன்னாருக்கு தனது ஆன்மீக விஷயங்களை இல்ஹாமாக இறக்கினான். இதன் மூலம் மக்கள் மனத்தில் புதைந்து கிடக்கின்ற அறிவை மறைத்த ஆட்சேபனைகளுக்கு பதில் அளிக்கவும். மேலும் இதன் காரணமாக அரபு நாடு கலாச்சார சீர்கேடு மற்றும் ஒழுக்க வழிகேடுகளை களைய வழிவகுக்கப்பட வேண்டும். முன்னேற்றப் பாதையிலிருந்து விலகிக் கிடக்கும் அரபு நாடு நேர்வழி பெற வேண்டும்.

எழுதுகின்றார்: ஹுஸுர் எனது பைஅத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். இன்று எனக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்தது பெருமையாக இருக்கின்றது.

**பிறகு ஓமன் நாட்டைச் சேர்ந்த ஒரு நண்பர் யாஸர் சாஹிப் எழுதுகின்றார்:**

இவர் ஜுன் மாதம் 2011-ல் எழுதியிருக்கிறார். ஒரு வருடமாக உண்மையைத் தேடிக் கொண்டிருந்தேன். அதனை இப்பொழுது பெற்று விட்டேன். அல்ஹம்துலில்லாஹ். முஸ்லிம்களின் தற்போதைய நிலையைக் கண்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது உம்மத்தின் முன்னேற்றத்திற்காக திரும்ப வர வேண்டும் என்ற ஆசை எனக்கு அதிகமாக இருந்தது. ஒருமுறை பல சேனல்களை மாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது M.T.A வை பார்ப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய புகைப்படத்தை பார்த்ததும் அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய புகைப்படத்தைப் பார்த்தது போன்று தோன்றியது. இந்தப் படம் எனது உள்ளத்தில் பதிந்து விட்டது. ஒருநாள் ஒரு நண்பர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வருகை பற்றி கூறினார். மேலும் தஜ்ஜாலைப் பற்றியும் கூறினார். தஜ்ஜால் என்பது கிறிஸ்தவ பாதிரிகள் ஆவார்கள் என்று கூறினார். அதற்கு நான் ஆரம்பத்தில் மிகவும் கடுமையாக எதிர்த்தேன். ஆனால் பிறகு உண்மை வெளிப்பட்டது. இந்த நாள் இரவு 2 மணி வரை M.T.A வைப் பார்த்துக் கொண்டிருந்தேன். மேலும் ஜமாஅத் மற்றும் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் அன்பு அதிகமாகிக் கொண்டே சென்றது. அல்லாஹ் எனக்கு சரியான பாதையின் பக்கம் என்னை வழிநடத்தியிருக்கின்றான். மேலும் ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினையும் வழங்கியுள்ளான்.

அவர் எழுதுகிறார்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்கள், இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் தப்ஸீரே கபீர் போன்றவற்றை நான் படித்திருக்கின்றேன். அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது என்றும், அவர் என்னை சந்திப்பதற்கு ஆவலாக இருக்கின்றார் என்றும் எழுதியுள்ளார். துஆ செய்யவும் விண்ணப்பம் செய்துள்ளார்.

இவர்கள் பைஅத் மட்டும் செய்வதில்லை. மாறாக பைஅத் செய்து தனது அறிவை வளர்க்கவும் செய்கின்றனர். பிறப்பு அஹ்மதி என்று கூறக்கூடியவர்களுக்கு இது ஒரு சிந்திக்கும் தருணமாகும். எங்களுடைய இரத்தத்தில் அஹ்மதிய்யத் உள்ளது. எங்களுக்கு மேலும் அறிவைப் பெறுவது அவசியமில்லை என்றும் தனது தக்வா மற்றும் நன்மையில் முன்னேறத் தேவையில்லை என கருதுகின்றனர்.

**பிறகு நார்வேயிலுள்ள குர்திஸ்தானைச் சேர்ந்த ஒரு பெண்மணி பெரிபான் சாஹிபா எழுதுகின்றார்:**

2006 -ல் ஒருநாள் M.T.A. பார்ப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. உங்களுடைய பேச்சு, இஸ்லாத்தைப் பற்றிய உண்மையான விளக்கம் போன்றவற்றை உங்களிடமிருந்து கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். பிறகு இந்த சேனலின் நம்பர் தொலைந்து விட்டது. பிறகு திடீரென்று 2010 -ல் இந்த சேனல் திரும்பவும் கிடைத்தது. அல் ஹிவாருல் முபாஹிர் என்ற நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. உங்களுடைய ஆதாரங்கள் மற்றும் தப்ஸீர் போன்றவற்றைக் கேட்டு மிகவும் தாக்கத்திற்கு உள்ளானேன். நிகழ்ச்சியின் இறுதியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது புகைப்படம் காட்டப்பட்டது. அன்னாரது உண்மைத்துவத்தில் ஒரு நொடிப்பொழுது கூட சந்தேகம் ஏற்படவில்லை. மேலும் இதுவரைக்கும் அவர்களைப் பற்றி தெரியாமல் இருந்ததற்காக வருத்தப்பட்டேன். மேலும் அன்னார் நபியாக இருப்பது பற்றி வருத்தமடைந்தேன். மேலும் அன்னார் நபியாக இருப்பது பற்றி ஒரு சில சந்தேகங்கள் இருந்தன. ஜமாஅத் சார்பாக கொடுக்கப்பட்ட விளக்கங்கள் மற்றும் ஆதாரங்கள் மூலம் அதுவும் விலகி விட்டது. தற்பொழுது நான் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் உண்மையான இமாம் மஹ்தி என நான் சாட்சி கூறுகின்றேன்.

தொடர்ந்து எழுதுகின்றார்கள்: நீங்கள் செய்யக்கூடிய சேவைகளை மிகவும் பொறாமையுடன் பார்க்கின்றேன். இந்த ஜிஹாதில் கலந்து கொள்ள ஆசைப்படுகின்றேன். தயவு செய்து எனக்கு இதற்கான வாய்ப்பளியுங்கள்.

இந்த அழகிய ஜிஹாதிற்கான போதனையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்தான் தந்தார்கள். மேலும் இதனை குர்ஆன் மற்றும் ஹதீஸ்களிலிருந்து ஞானம் பெற்று தந்துள்ளார்கள். இந்த ஜிஹாதை தான் அவர்கள் இக்காலத்தில் அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். இது வெறும் ஆண்களுக்கு மட்டும் கிடையாது. மாறாக ஆண்களுடன் பெண்களும் இந்த ஜிஹாதில் கலந்து கொள்கிறார்கள். மேலும் சில சமயங்களில் ஆண்களை விட அதிகமாக பெண்கள் இதில் பங்கு கொள்கிறார்கள்.

**பிறகு அல்ஜீரியாவைச் சேர்ந்த ஹுஸைன் முஹம்மது சாலிஹ் சாஹிப் எழுதியவாறு கூறுகின்றார்:**

ஏறக்குறைய 10 வருடங்களுக்கு முன்பு அனைத்து மக்களும் அறிந்த சடங்கு நிறைந்த இஸ்லாத்தை தவிர வேறெதுவும் எனக்கு தெரியாது. பலவிதமான ஆட்சேபனைகள் இருந்தன. இருந்தபோதிலும் நான் திருக்குர்ஆனை ஓதுவேன். மேலும் புரிவதற்கு முயற்சி செய்வேன்.

ஒருநாள் நான் டி.விக்கு முன்பு உட்கார்ந்து மார்க்க சம்பந்தப்பட்ட சேனல்களை தேடினேன். எனக்கு M.T.A.கிடைத்தது. அதில் அல்ஹிவாருல் முபாஹிர் என்ற நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதனுடைய தன்மை, அறிவு சம்பந்தப்பட்ட விஷயங்கள் எனக்கு பிடித்திருந்தது. குறிப்பாக அந்த நிகழ்ச்சியில் அமர்ந்திருந்த உலமாக்கள் அனைத்து மதங்களைப் பற்றி அறிந்திருப்பது அதில் குறிப்பாக இஸ்லாமிய அறிவு பற்றிய விஷயங்கள் என்னை தாக்கத்திற்கு உள்ளாக்கியது. எனவே அப்போதிலிருந்தே நான் அஹ்மதி ஆகி விட்டேன். எனது ஆன்மீகத்தில் அதிக அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பல்வேறு அரபு மற்றும் பிரான்ஸ் நூல்கள், பத்திரிகைகள் உங்களுடைய குத்பாக்கள் என்னிடம் உள்ளன என எழுதியுள்ளார். நான் மக்களை தொடர்பு கொண்டு பேசுவதற்கு எளிமையாக இருக்கும் என்பதற்காக தப்ஸீரே கபீரை டவுன்லோடு செய்து பிரிண்ட் செய்து வைத்துள்ளேன்.

எழுதுகிறார்: நான் பைஅத் செய்வதற்கு இவ்வளவு காலதாமதம் ஏன் செய்தேன் என்றால், நான் வெளிப்படையில் என்னை நான் அஹ்மதி எனக் கருதினேன். ஆனால் உள்ளத்தில் ஈமான் உறுதிபெறவில்லை. மேலும் பைஅத் செய்து பைஅத்திற்கு மாற்றமாக இருந்து விடக் கூடாது என அஞ்சினேன். அவருக்கு இறைவன் நேர்வழி காட்டுவதற்கு துஆ செய்யவும், தொடர்ந்து உறுதிப்பாட்டில் நிலைநிற்பதற்காக துஆ செய்யவும் விண்ணப்பம் செய்துள்ளார்.

எனவே இதுதான் புதிதாக வரக்கூடிய மக்களின் சிந்தனைகள் ஆகும். தற்போது இருக்கக் கூடியவர்களில் பலர் பழைய அஹ்மதிகள் மற்றும் பழைய அஹ்மதிகளின் சந்ததிகளாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு இதுபோன்ற சிந்தனை ஏற்பட வேண்டும். நாம் நமது பைஅத்தை எவ்வாறு எல்லாவிதமான ஆற்றல்களுடன் நிறைவேற்ற முடியும் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். அப்போதுதான் நாம் உண்மையான அஹ்மதிகள் ஆவோம்.

**பிறகு அரபு நாட்டைச் சேர்ந்த நாஸிர் சாஹிப் கூறுகின்றார்:**

நான்கு வருடங்களுக்கு முன்பு நான் உண்மையைத் தேட ஆரம்பித்தேன். நான் சுன்னி, ஷியா, இஸ்னா அஷ்ரி போன்றவர்களின் விவாதங்களைப் பார்த்திருக்கிறேன். இஸ்னா அஷ்ரி 12 இமாம்களை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்கள். இதுவும் சுன்னி முஸ்லிம்களைச் சேர்ந்த ஒரு பிரிவாகும். கூறுகின்றார்: அனைத்து விதமான விவாதங்களையும் கண்டுள்ளேன். இதில் சுன்னி முஸ்லிம்களின் ஆதாரங்களே உறுதியானவையாக எனக்கு தென்பட்டன. பிறகு ஏறக்குறைய மூன்று மாதங்களுக்கு முன்பு M.T.A.வுடன் எனக்கு தொடர்பு ஏற்பட்டது. அதில் மதிப்பிற்குரிய ஹானி தாஹிர் சாஹிப் அவர்கள் என்னை மிகவும்

கவர்ந்தார்கள். பிறகு எனக்கு ஜமாஅத்துடன் ஒரு ஆர்வம் ஏற்பட்டது. மேலும் ஜமாஅத்திற்கு எதிராக மக்கள் மத்தியில் பரப்பப்படும் அடிப்படையான விஷயங்கள் அனைத்தும் ஜமாஅத்திற்கு எதிரான மவ்லவிகள், இஹ்ஸானுல்லா ஜஹீர் போன்றோரின் நூல்களில் அடங்கியுள்ளது என்பது எனக்கு தெரிய வந்தது. இதனைப் போன்று தனது சுற்றுப்புறத்தில் உள்ள உலமாக்களின் கொள்கைக்கு மாற்றமான கொள்கைகளை உடைய மக்களின் நடவடிக்கைகள் என்னை மிகவும் கஷ்டத்திற்குள்ளாக்கியது. ஏனென்றால் எங்களது அருகில் சில ஷியாக்களும் உள்ளனர். மக்கள் இவர்களுடன் ஏளனத்துடன் தான் நடந்து கொள்வார்கள். நான் எனது உள்ளத்தில் எப்போதும் கூறினேன். மார்க்க விஷயத்தில் எவரையும் ஏளனம் செய்யக் கூடாது. ஏனென்றால் நமது பெற்றோர்களும் ஷியா அல்லது கிறிஸ்தவர்களாக இருந்தவர்கள்தான். மேலும் எப்போதும் இதனையும் அதாவது நாம் உண்மையில் இருந்தால் மற்றவர்களுக்காகவும் துஆ செய்ய வேண்டும். அவர்களை ஏளனத்துடனும் இழிவாகவும் பார்க்கக் கூடாது என நான் கூறி வருவேன். ஏனென்றால் இதுதான் நபிமார்களுடைய சுன்னத் ஆகும். இதனைப் போன்றே நான் ஷியாக்களுடைய கொள்கையையும் சரியென்று கருதவில்லை. நான் தற்போது ஹானி தாஹிர் உடைய ஆதாரங்களின் மூலம் திருப்தி அடைந்துள்ளேன். எனக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உண்மைத்துவத்திற்கு மேலும் பல சான்றுகளைத் தாருங்கள். மேலும் பைஅத் செய்த பிறகு நான் என்ன செய்ய வேண்டும்? எனக்கு இதற்கான உதவியையும் ஹிதாயத்திற்கான வழிகாட்டலையும் காட்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பிறகு ஈராக்கைச் சேர்ந்த கனி முஹம்மது சாஹிப் எழுதுகின்றார்:**

நான் மூன்று வருடங்களாக M.T.A.வைப் பார்க்கின்றேன். தொடர்ந்து ஆராய்ந்து கொண்டிருந்தேன். பிறகு இஸ்திகாரா செய்தேன். பல நாட்கள் வரை எந்தவிதமான கனவும் காணவில்லை. தொடர்ந்து இஸ்திகாரா செய்து வந்தேன். ஒருநாள் உம்மை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நினைவுகூர்ந்தார்கள் என ஒருவர் கனவில் கூறினார். பிறகு அந்த மனிதர் என்னை அழைத்துச் சென்றார். பிறகு ஒரு கூடாரத்திற்குள் சென்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் முஸாபாக செய்யுங்கள் என்றார். பிறகு நான் ஒரு குன்றின் மேல் அமைந்திருந்த கூடாரத்திற்குள் சென்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை சந்தித்தேன். பிறகு அதே மனிதர் மற்றொரு குன்றிக்குச் சென்று நபி (ஸல்) அவர்களை சந்தியுங்கள் என்றார். நான் கனவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இருவராக எவ்வாறு இருக்க முடியும் என ஆச்சரியப்பட்டேன். பிறகு நான் மற்றொரு குன்றின் மேல் அமைந்திருந்த கூடாரத்தினுள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அதே முகப்பாவனையுடன் பார்த்தேன். ஆனால் உயரம் கொஞ்சம் குறைவாக இருந்தது. இந்த கனவிற்கு பிறகு உள்ளம் தெளிவு பெற்றது. தான் தற்பொழுது பைஅத் செய்ய விரும்புகின்றேன். எனக்கு ஜமாஅத்தில் அனைத்து நாட்டு சமுதாய மக்கள் எந்தவித நிற, இன வேறுபாடு இல்லாமல் இணைகின்றார்கள் என்பதைப் பார்க்கும் போது மிகவும் பிடித்திருக்கின்றது. அனைத்து உலகத்தையும் ஒரு கையில் ஒன்று சேர்க்கும் பணியினை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனை இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் செய்து கொண்டிருக்கின்றது.

**பிறகு காலித் சாஹிப் எழுதுகின்றார்:**

ஒருநாள் ஒரு நண்பர் அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி என்னிடம் கூறினார். இவர்கள் இந்தியாவில் மஸீஹ் மவ்வூது தோன்றி விட்டார் என்று நம்பக்கூடியவர்கள் ஆவர். மேலும் சில கொள்கைகளையும் கூறினார். எனக்கு ஆரம்பத்திலேயே உள்ளம் திருப்தி அடைய ஆரம்பித்தது. பிறகு M.T.A.பார்த்தேன். எனக்கு மேலும் திருப்தி கிடைத்தது. நான் அந்த நண்பரிடம் பைஅத் செய்ய விரும்புகிறேன் என்று கூறினேன். அவர் மிகவும் ஆச்சரியத்துடன் நீ பைத்தியமாகி விட்டாயா எனக் கேட்டார். நான் கூறினேன். எனது உள்ளம் திருப்தி அடைந்து விட்டது. நான் பைஅத் செய்ய விரும்புகின்றேன்.

இதற்கு முன்பு நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புகைப்படத்தை பார்த்ததுமே அன்னார் உண்மையாளர் என்பதை ஏற்றுக் கொண்டேன். M.T.A.மூலமாக இஸ்லாத்தைப் பற்றி சரியான

விளக்கமும் கிடைத்தது. அல்ஹம்துலில்லாஹ். இதன் மூலமாக காலத்தின் இமாமை கண்டறிய முடிந்தது. ஏறக்குறைய 1 வருடத்திற்கு முன்பு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கனவில் கண்டேன். ஹுஸுர் (ஸல்) அவர்கள் எனது முகத்தில் முத்தமிட்டார்கள். நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அரசாங்கம் மற்றும் அதிகாரிகளின் மோசமான நிலைபற்றி புகார் செய்தேன். தொடர்ந்து எழுதுகிறார்: நீங்கள் எங்களுடைய கண்களைத் திறந்து விட்டீர்கள். இருளிலிருந்து காப்பாற்றி உண்மையைக் காட்டியிருக்கிறீர்கள். உங்களுடைய கையில் பைஅத் செய்ய வேண்டும் என்பது எனது ஆசையாகும் என்று அவர் எனக்கு எழுதுகிறார்.

இன்னும் பல்வேறு சம்பவங்கள் உள்ளன. ஒரு சம்பவம் ஆப்பிரிக்காவிலிருந்து காம்பியாவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள். அங்குள்ள உள்ளூர் தலைவரின் தலைமையில் 12 இடங்களில் தப்லீக் செய்ய நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சிகள் மூலமாக அலியோ காமாரா சாஹிப் உடன் தொடர்பு ஏற்பட்டது. ஆப்பிரிக்காவில் அதிக இடங்களில் வாவ், அல்லது பேஷ் உடைய பெயருடன் இணைத்துக் கொள்வார்கள். அலியோ என்பது அலி ஆகும். அலி கமாரா சாஹிப் ஒரு முஸ்லிம் ஆவார். இவருக்கு ஜமாஅத் கொள்கைகள் பற்றி கூறப்பட்டது. இவருடன் தொடர்ந்து இரண்டு வாரங்கள் கலந்துரையாடல் நடைபெற்றது. பிறகு சதர் சாஹிப் அவர்கள் அவரிடம் நீங்கள் இறைவனிடம் ஹிதாயத்தை வேண்டுங்கள். மேலும் நானும் உங்களுக்காக துஆ செய்வேன் என்றார். அதே நாளில் இறைவன் ஒரு கனவில், 2011 மே 25 மற்றும் 26 நாள்களுக்கு இடைப்பட்ட நாள் இரவில் ஒரு கனவு கண்டார். அதில் தலைப்பாகை அணிந்துள்ள ஒரு முதியவர் அவரை தன் பக்கம் அழைக்கிறார். ஹிதாயத் இங்கிருக்கிறது. இங்கு வாருங்கள் என்று அழைக்கின்றார். காலையில் எழுந்து அவர் தனது கனவைக் கூறினார். அதில் நான் எந்த முதியவரைக் கனவில் கண்டேனோ அவர் இமாம் மஹ்தி ஆவார். ஏனென்றால் அவர் அந்தப்படத்தை அவருக்கு தப்லீக் செய்யும் நேரத்தில் கொடுக்கப்பட்ட ஒரு Magazine ல் இதற்கு முன் பார்த்திருக்கிறார். இதன் அடிப்படையில் பைஅத் படிவம் படிக்குமாறு கூறப்பட்டது. அந்த பைஅத் படிவத்தைப் படித்த அலி கமாரா சாஹிப் நான் இனி தாமதிக்கமாட்டேன் என்று கூறி உடனே பைஅத் படிவத்தை நிரப்பி ஜமாஅத்தில் இணைந்து விட்டார்.

**பிறகு ஐவரிகோஸ்டின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்:**

வாயக்கே பகுதியிலுள்ள ஒரு கிராமம் நியாகாராவில் தாவீஸ் போன்றவற்றை கட்டக்கூடிய ஒரு மவ்லவி கோனே இப்ராஹீம் என்பவர் ஒரு கனவு காண்கின்றார். அதில் முதியவர் அவரை சந்திக்கிறார். அதில் அந்த முதியவர் நான் ஈஸா நபி ஆவேன் என்று கூறுகின்றார். ஒருநாள் அவர் நமது மிஷன் ஹவுஸ் வந்தார். அங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புகைப்படத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். அவர் கூறினார். இந்த முதியவர்தான் எனது கனவில் தன்னை ஈஸா நபி என்று அறிமுகப்படுத்தினார். பிறகு உடனே அவர் பைஅத் செய்து விட்டார். அவர் செய்து வந்த தாவீஸ் கட்டும் வேலையை விட்டு விட்டார்.

எனவே இதுபோன்ற பல்வேறு சம்பவங்கள் இருக்கின்றன. இதிலிருந்து இறைவன் எவ்வாறு நல்லியல்பு கொண்ட மனிதர்களுக்கு பல்வேறு எதிர்ப்புகள் இருந்தும் கூட பல்வேறு வழிகளில் வழிகெடுக்க முயற்சி செய்யக்கூடிய மவ்லவிமார்கள் இருந்தும் கூட அல்லாஹ் பல்வேறு வழிகள் மூலமாக வழிகாட்டிக் கொண்டே செல்கின்றான் என்பது தெரிய வருகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது தூதுச் செய்தியினைக் கேட்டு அல்லது புகைப்படத்தைப் பார்த்து ஒருவிதமான ஈர்ப்பு அவர்களிடம் ஏற்படுகின்றது. அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் முன்னேற்றம் நாம் செய்யக்கூடிய முயற்சியை விட மிக அதிகமாக நடக்கின்றது. இது இறைவனுடைய பணி ஆகும். இது இன்ஷா அல்லாஹ் முழுமை வரை சென்றடையும். ஆனால் இந்த முன்னேற்றம் நம்மை இதன் பக்கமும் கவனமூட்டுகிறது. அதாவது ஜமாஅத்தில் இணைந்து ஒரு காலத்தை கழித்து விட்ட நாம் அல்லது அஹ்மதிய்யா ஜமாஅத்தைக் கற்றுக் கொண்டவர்களின் பிள்ளைகளாகிய நாம் நமது நிலையை எவ்வாறு சீராக்க வேண்டும். நாம் என்ன செய்ய வேண்டும்? நமது தரம் எவ்வாறு இருக்க வேண்டும். நான் கூறியது போன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். நீங்கள் நன்மையில் பின்னோக்கிச்

செல்கின்றீர்கள் என்றால் கவலை அடையுங்கள். இவ்வாறு தொடர்ந்து கவனக்குறைவு ஏற்படுவதால் மனிதன் மிகவும் பின்னடைந்து போய் விடுகின்றான். பைஅத் செய்த பிறகு நான் எந்த விஷயத்தை செய்ய வேண்டும் என்பதைப் பற்றி சிந்தித்துக் கொண்டே இருக்க வேண்டும். சில கவனம் செலுத்தப்பட வேண்டிய விஷயங்கள் உள்ளன. அவற்றை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அருளுக்குரிய கூற்றின் மூலமாக எடுத்துரைக்கின்றேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஷரீஅத்திற்கு இரண்டு பெரிய பகுதிகள் மட்டும் தான் உள்ளன. அதனை பாதுகாப்பது மனிதனுக்கு அவசியமானதாகும். ஒன்று ஹக்கல்லாஹ் (அல்லாஹ்வுடைய உரிமை). இரண்டாவது ஹக்குல் இபாத் (படைப்பினங்களின் உரிமை). அல்லாஹ்வுடைய ஹக் என்பது அல்லாஹ்வின் முஹப்பத் அவனுக்கு கட்டுப்படுதல் அவனுக்குரிய இபாதத், தவ்ஹீது அவனது இருப்பு மற்றும் பண்பில் எவரையும் இணைவைக்காமல் இருப்பதாகும். ஹக்குல் இபாத் என்பது தனது சகோதரர்களுடன் தற்பெருமை, துரோகம், எந்த விதமான அநீதியிழைக்கக் கூடாது என்பதாகும். எனவே நல்லொழுக்கப் பிரிவில் எந்தவித குறைபாடும் இருக்கக்கூடாது.

கேட்பதற்கு இரண்டே வரிகள் தான். ஆனால் அமல் செய்வது மிகவும் கடினமானதாகும். இன்று இந்த வேலைகள் அஹ்மதிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது எளிதான பணி கிடையாது. மவ்லவிகள் போன்று சமைத்து ஹல்வாவைச் சாப்பிடுவது போன்று இல்லை. நாம் சீர்திருத்தம் செய்ய வேண்டிய வேளையை செய்ய வேண்டும். இதன் பக்கம் ஒவ்வொரு அஹ்மதியும் கவனம் செலுத்துவது அவசியமானதாகும்.

**கூறுகின்றார்கள்:** அல்லாஹ்வுடைய மாபெரும் கருணை மனிதன் மீது இருந்தால் தான் இந்த இரு பணிகளையும் மனிதனால் செய்ய முடியும். எனவே எந்நேரமும் அவன் முன்பு குனிந்தவாறு அருளை வேண்டுங்கள். நமது பாதங்கள் ஒருபோதும் பின்னே செல்லக் கூடாது. நன்மையில் நாம் பின்செல்லக் கூடாது. தக்வாவில் நாம் முன்னேறச் கூடியவர்களாக ஆக வேண்டும். எந்நேரமும் நம்மீது அல்லாஹ்வுடைய அருள் இருக்க வேண்டும்.

கூறுகின்றார்கள்: சிலரிடம் கேட்கப்படும் தன்மை அதிகமாக இருக்கும். அதாவது அவர்கள் விரைவில் கோபம் அடைந்து விடுவார்கள். கோபம் அடையும் போது அவருடைய உள்ளமும் தூய்மையாக இருக்காது. அவருடைய நாவும் தூய்மையாக இருக்காது. மனிதன் கோபம் அடையும் போது அவனது உள்ளமும் நாவும் தூய்மையற்றதாகி விடுகிறது. நாம் பார்க்கும் போது இவ்வாறு தான் தென்படுகின்றது. பலவிதமான பிரச்சனைகள், பலவிதமான சண்டைகள், பலவிதமான மனக்கஷ்டங்கள், இதனால் தான் உருவாகின்றன. அல்லது உள்ளத்தில் பொறாமை எழுகின்றது. பிறகு அதற்கு பழிவாங்கப்படுகின்றது. சில நேரங்களில் எவ்வாறெல்லாம் பேசப்படுகின்றது என்றால் அது மூஃமினுடைய வாயிலிருந்து வெளிப்படக்கூடிய வார்த்தைகளாக, கண்ணியமான வார்த்தைகளாக இருப்பதில்லை.

கூறுகின்றார்கள்: உள்ளத்தில் தனது சகோதரனுக்கு எதிராக தூய்மையற்ற திட்டங்களைத் தீட்டுகின்றான். வாயினால் தீய வார்த்தைகளைக் கூறுகின்றான். பிறகு பொறாமை கொள்கின்றான். சிலரிடம் காம உணர்வு மேம்படுகிறது. அவர் அதில் விழுந்து அல்லாஹ்வினால் ஏற்படுத்தப்பட்ட எல்லையை மீறி விடுகின்றார். இந்நாடுகளில் அசிங்கமான திரைப்படங்கள் பார்ப்பது, வெட்கங்கெட்ட விஷயங்களைக் கேட்பது, வீணானவற்றைப் பார்ப்பது போன்றவைகள் உள்ளன. இதனால் தான் உள்ளத்திலிருந்து தக்வா அகன்று போய் விடுகின்றது. இதுதான் வரம்பற்ற உணர்வு ஆகும். இளைஞர்கள் குறிப்பாக இதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

கூறுகின்றார்கள்: எப்பொழுது வரை மனிதனுடைய நல்லொழுக்கங்கள் சீரடைவதில்லையோ **முன்இம் அலைஹிம்** (எவர்கள் மீது அருள்செய்யப்பட்டதோ அக்) கூட்டத்தினருடன் இணைக்கக்கூடிய முழுமையான

ஈமான், மேலும் எதன் மூலமாக உண்மையான ஞானத்திற்கான ஒளி கிடைக்குமோ அதில் நுழைய முடியாது. இது மிகவும் சிந்திக்க வேண்டிய இடமாகும். நாம் ஈமானில் முன்னேறுவோம் என்று நினைக்கின்றோம். இதுபோன்ற விஷயங்கள் உங்களிடத்தில் இருந்தால் ஈமானில் முன்னேறவே முடியாது.

கூறுகின்றார்கள்: எனவே இரவும் பகலும் இதே முயற்சியில் தான் இருக்க வேண்டும். மனிதன் தன்னுடைய ஒழுக்கத்தை சீர்படுத்தக்கூடிய உண்மையான உறுதிமொழி எடுப்பவனாக இருக்க வேண்டும். நான் ஓரிறைவனை வணங்கக்கூடியவன் என்று உறுதி கொண்ட பிறகு தனது ஒழுக்கத்தை சீர்படுத்த வேண்டும்.

கூறுகின்றார்கள்: நான் பார்க்கின்றேன். தற்போது ஒழுக்கநிலை மிகவும் சீர்கெட்டுப் போய் கிடக்கின்றது. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காலத்தில் நல்லொழுக்க நிலை மிகவும் உயர்ந்ததாக இருந்தது. அன்னார் அதனை விட மேன்மையான நல்லொழுக்க நிலையைப் பார்க்க விரும்பினார்கள். இன்று நாம் நமது நிலையை ஆராய வேண்டும்.

கூறுகின்றார்கள்: அதிகப்படியான மக்களிடம் தப்பெண்ணம் என்ற நோய் உள்ளது. அவர்கள் தனது சகோதரருடன் நல்லெண்ணம் கொள்வதில்லை. சின்னச் சின்ன விஷயங்களிலும் கூட தனது சகோதரனுக்கு எதிராக தீய எண்ணம் கொள்கின்றனர். தன்னுடைய சகோதரனைப் பற்றி எப்படிப்பட்ட குறைகளை கூறுகின்றார்கள் என்றால் அதே குறையை கூறக்கூடியவரை நோக்கி நாம் கூறினால் மிகவும் வெறுக்கத்தக்கதாக கருதுகின்றனர். எனவே முதல் விஷயம் முடிந்த வரை தனது சகோதரனைப் பற்றி தப்பெண்ணம் கொள்ளக் கூடாது. எப்பொழுதும் நல்லெண்ணமே கொள்ள வேண்டும். ஏனென்றால் இதன் மூலம் அன்பு அதிகமாகும். இதன் மூலம் பாசம் ஏற்படும். தமக்கிடையில் ஆற்றல் உண்டாகும். இதன் காரணமாக மனிதன் போட்டி, பொறாமை போன்றவற்றிலிருந்து தவிர்ந்திருக்க முடியும்.

எதிரிகளுடைய பொறாமை என்ற நெருப்பு முதலிலேயே நமக்கு எதிராக கொளுந்து விட்டு எரிகின்றது. மேலும் நாம் நமக்கிடையில் இதுபோன்ற செயல்களை செய்து வருகின்றோம் என்றால் இந்த ஜமாஅத்தில் இணைந்திருப்பதால் என்ன பயன்?

தொடர்ந்து கூறுகின்றார்கள்: தனது சகோதரனைப் பற்றிய அனுதாபம் இல்லாத பலரும் உள்ளனர் என்பதை நான் பார்க்கின்றேன். ஒரு சகோதரன் பசியினால் வாடுகின்றார் என்றால் அவனுடைய சகோதரர் அவனைப் பற்றி கவலை அடைவதில்லை. அவனுக்கு உதவி செய்வதற்குத் தயாராக இருப்பதில்லை. அல்லது தனது சகோதரர் வேறு ஏதேனும் துன்பத்தில் இருந்தால் தனது பொருளிலிருந்து ஏதாவது செலவு செய்யத் தயாராக இருப்பதில்லை. ஹதீஸில் தனது அண்டை வீட்டாருடன் நல்ல முறையில் நடந்து கொள்வது மற்றும் அவர்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என கட்டளையிடப்பட்டுள்ளது. மாறாக எந்த அளவு என்றால் நீங்கள் இறைச்சி சமைத்தீர்கள் என்றால் அதில் குழம்பை கொஞ்சம் அதிகமாக வையுங்கள். அதன் மூலம் அண்டை வீட்டாருக்கும் கொடுக்க முடியும். இன்று என்ன நடக்கிறது? தன்னுடைய வயிற்றை மட்டும் வளர்க்கின்றார்கள். அண்டை வீட்டாரைப் பற்றி கவலைப்படுவதே இல்லை. அண்டை வீட்டார் என்பது உங்கள் வீட்டிற்கு அருகில் இருக்கக்கூடியவர் மட்டும் கிடையாது. மாறாக உங்களுடைய சகோதரர்களும், நூறு அடி தொலைவில் இருந்தாலும் கூட அண்டை வீட்டார் ஆவார்கள்.

நாம் நமது நிலையை சரிசெய்து கொள்வோமாயின், பிறகு உண்மையில் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்து, அன்னாருடைய ஜமாஅத்தில் இணைவதற்கான உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாவோம். புதிய அஹ்மதிகளும் தனது நிலைமையில் மேன்மை அடைந்து கொண்டே செல்பவர்களாக ஆகட்டுமாக! தனது மேன்மையின் தரத்தை மறந்த பழைய அஹ்மதி, சோம்பேறி அஹ்மதி தனது பைஅத்தின் உரிமையை நிறைவேற்றுபவர்களாக ஆகட்டுமாக! அன்னாரிடம் செய்த பைஅத்தின் நோக்கத்தை நிறைவேற்றக் கூடியவர்களாக ஆவோமாக!

**தனது வருகையின் நோக்கம் எதிரிகளின் எதிர்ப்பு மற்றும் ஜமாஅத்தின் முன்னேற்றத்தைப் பற்றி ஓரிடத்தில் கூறுகின்றார்கள்.**

நான் வருவதற்கு இரண்டு நோக்கங்கள் இருந்தன. முஸ்லிம்களுக்கு உண்மையான தக்வா மற்றும் தூய்மை ஏற்பட வேண்டும் என்பதாகும். அவர்கள் அல்லாஹ் முஸ்லிம்கள் என்று யாரை கருதுகின்றனரோ அப்படிப்பட்ட முஸ்லிம்களாக ஆக வேண்டும். இரண்டாவது கிறிஸ்தவர்களின் சிலுவையை உடைத்தல் ஆகும். அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கடவுள் அவர்களுக்கு தென்படக் கூடாது. உலகம் இதனை மறந்து விட வேண்டும். முழுமையாக மறந்து விட வேண்டும். ஓரிறைவனை மட்டும் வணங்கப்பட வேண்டும்.

கூறுகின்றார்கள்: என்னுடைய இந்த நோக்கங்களைப் பார்த்து இந்த மக்கள் என்னை ஏன் எதிர்க்கின்றார்கள்? அதாவது குறிப்பாக முஸ்லிம்களிலுள்ள எதிரிகள் இந்த இரண்டு நோக்கங்களை அதாவது தக்வாவை நிலைநாட்டுவது மற்றும் தவ்ஹீதை நிலைநாட்டுவது இதனைக் கண்டும் கூட என்னை எதிர்க்கின்றார்கள்.

இவர்கள் நினைவில் கொள்ளட்டும். எந்தவொரு வேலையும் நயவஞ்சகம் மற்றும் தூய்மையற்ற உலக வாழ்க்கையுடன் இருக்குமோ அது தானாகவே அந்த விஷமத்தினால் அழிந்து போய் விடும்.

அதாவது எதிரிகள் நினைவில் கொள்ள வேண்டும். அவர்களது இயல்பில் நயவஞ்சகத்தனம் இருக்கும் என்றால் அவர் தூய்மையற்ற உலக வாழ்க்கைக்காக வேலை செய்கிறார் என்றால் அந்த விஷமத்திலேயே விழுந்து தானே அழிந்து போய் விடுவார். பொய்யன் வெற்றி பெறுவானா?

*அல்லாஹ் கூறுகின்றான்: நிச்சயமாக இறைவன் வரம்பு மீறக்கூடியவனுக்கும், அதிகமாக பொய் கூறக்கூடியவனுக்கும் நேர்வழியினை வழங்க மாட்டான். (40:29)*

பொய்யனுடைய அழிவிற்கு அவனுடைய பொய்யே போதுமானதாகும். ஆனால் எந்தவொரு வேலை இறை வல்லமைக்காகவும், அவனது ரஸூலின் பரக்கத்துகளுக்கு ஆதாரமாகவும் இருக்குமோ, இறைவனால் நடப்பட்ட செடியாக இருந்தால் பிறகு அதனை அவனது மலக்குமார்களே பார்த்துக் கொள்வார்கள். அதனை யாரால் அழிக்க முடியும்?

நினைவில் கொள்ளுங்கள். எனது ஜமாஅத் வெறும் வியாபாரமாக இருக்குமென்றால் அது அடையாளம் தெரியாத அளவுக்கு அழிந்து விடும். ஆனால் இது இறைவன் புறமிருந்து வந்ததாகும். நிச்சயமாக இது இறைவன் புறமிருந்து வந்ததாகும். முழு உலகமும் இதனை எதிர்த்தாலும் சரியே. இது வளரும்; பரவும்; மலக்குமார்கள் இதனை பாதுகாப்பார்கள்.

கூறுகின்றார்கள்: ஒரு மனிதர் கூட என்னுடன் இல்லையென்றாலும், எவரும் உதவி செய்யவில்லையென்றாலும் கூட இந்த ஜமாஅத் வெற்றியடையும் என்பதை நான் நம்புகிறேன். பாருங்கள். நாம் கேட்ட சம்பவங்கள் அல்லாஹ் எவ்வாறு மக்களுடைய உள்ளங்களில் உணர்வுகளை ஏற்படுத்துகின்றான்.

ஒரு மனிதருக்கு நீ சிறு வயதில் இமாம் மஹ்தியின் சிப்பாயாக ஆவீர் என்ற உள்ளத்தில் இந்த விஷயத்தை ஊட்டுகிறான். பல வருடங்களுக்குப் பிறகு அவர் இளைஞராக ஆகும்போது அவருக்கு இமாம் மஹ்தி தோன்றி விட்டார் என தெரிய வருகிறது. அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இதுபோன்ற உதவியாளர்களை தானே ஏற்படுத்துகின்றான். எவரும் உதவி செய்யவில்லை என்றாலும் அல்லாஹ் உதவி புரிவான். இந்த ஜமாஅத் வெற்றி பெறும் என்பதே இதன் பொருளாகும். நாம் நமது நிலையைக் கவனிக்க வேண்டும்.

பிறகு கூறுகின்றார்கள்: நான் எதிர்ப்புகளைக் கண்டு கவலை அடையமாட்டேன். இதனையும் தனது ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கு அவசியமாக கருதுகின்றேன். இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லது

அவனது கலீஃபா உலகில் வரும் போது மக்கள் அவரை எதுவும் கூறாமல் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பது ஒருபோதும் நடைபெறவில்லை. உலகின் நிலை வியப்பானதாகும். மனிதன் எவ்வளவுதான் உண்மையாளராக இருந்தாலும் சரியே, மற்றவர்கள் அவரை பின்தொடராமல் விடுவதேயில்லை. ஆட்சேபனை செய்து கொண்டே இருப்பார்கள்.

கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் அருளால் நமது ஜமாஅத்தின் முன்னேற்றம் வலுவடைந்து கொண்டே செல்கிறது. ஒரு சமயங்களில் 400 அல்லது 500 பட்டியலைக் கொண்ட பைஅத் கடிதங்கள் வருகின்றன. மேலும் தினமும் 10 அல்லது 15 பைஅத்திற்கான படிவங்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. நேரடியாக வந்து பைஅத் செய்யக்கூடிய மக்கள் வேறு தனியாக இருக்கின்றார்கள். இவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலகட்டத்தில் உள்ள நிலையாகும்.

நான் சம்பவங்களில் கூறியது போன்று அல்லாஹ் உலகம் முழுவதற்கும் இந்த காற்றை வீச வைத்துள்ளான். அன்னாரின் பைஅத்தின் கீழ் வருபவர்களின் எண்ணிக்கை சில சமயங்களில் 500 யும் தாண்டி ஆயிரக்கணக்கில் சென்று விடுகின்றது. அல்லாஹ் தனது பணியை செய்து கொண்டே செல்கிறான். அல்லாஹ் நமக்கும் வாய்ப்பளிப்பானாக. நாமும் நமது பைஅத்தில், இந்த ஜமாஅத்தில் இணைந்ததற்கான உரிமையை நிறைவேற்றக்கூடியவர்களாக ஆவோமாக!

இறுதியில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு அழகான துஆவை எடுத்துரைக்கின்றேன். இதிலிருந்து அன்னாருடைய மன வேதனையின் நிலையை நம்மால் உணர முடியும். அதிகமான நிலநடுக்கம் மற்றும் அழிவுகளைப் பற்றி அன்னாரின் ஒரு கூட்டத்தில் பேசப்பட்டது. இன்றும்கூட அதுபோன்ற அழிவுகள் வருகின்றன.

அன்னார் கூறுகின்றார்கள்: நாம் இவ்வாறு துஆ செய்கின்றோம். இறைவன் ஜமாஅத்தை பாதுகாப்பானாக! மேலும் உலகில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே உண்மையான நபி என்பது வெளிப்பட வேண்டும். இறை இருப்பில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும்.

எப்படிப்பட்ட நில நடுக்கம் வந்தாலும் சரியே, இறைவனது முகம் ஒருமுறை மக்களுக்கு தென்பட்ட பிறகு அவன் மீது நம்பிக்கை வர வேண்டும். நான் கூறியது போன்று இன்றைய காலத்திலும் அதிக அளவில் ஏற்படக்கூடிய அழிவுகளைக் கண்டு உலகம் இறைவனையும் அவனது ரஸூலையும் கண்டறிந்து கொள்ளட்டுமாக! முஸ்லிம்களும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பரை கண்டறிந்து தொலைந்துபோன ஈமானை மீண்டும் மீண்டும் நிலைநாட்டக் கூடியவராக ஆகட்டுமாக! தவ்ஹீதை நிலைநாட்டக் கூடியவர்களாக ஆகட்டுமாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT KHUDDAM IJTIMA GROUND, GERMANY**
**ON 16.09.2011**

Translated by : **Maulavi ZIAUL HAQ**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**